RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# புராணம் முதல் பிரதமர் வரை - ஒடுக்கப்பட்டோரின் குரல்

ர. தமிழ் [அ, *]

[அ] தமிழ்த்துறை, மாநிலக்கல்லூரி, சென்னை-600005, இந்தியா

# From Purana to Prime Minister - The Voice of the Oppressed people

R. Thamizh [a, *]

[a] Department of Tamil, Presidency College, Chennai-600005, India

* Corresponding Author: tamilr185@gmail.com

Received: 24-11-2025
Revised: 18-02-2026
Accepted: 01-03-2026
Published: 16-03-2026

Check for updates

**ABSTRACT**

This research paper discusses, through the lens of Rajam Krishnan and based on contemporary changes, the status of women in different periods of Indian social history, focusing on women's issues and the leaders who strived for women's empowerment, as presented in her book 'inthiya samuthaayavarlaatril penmai'. This article also explains the background of Rajam Krishnan, who provides clear and detailed information about the Puranas.This article also presents the ideas that Rajam Krishnan offers to empower women to think and act independently.

**Keywords:** Rajam Krishnan, Women's empowerment, Contemporary changes, Women issues

## முன்னுரை

இன்றைய சூழலில் பெண்கள் பல துறைகளில் தடம் பதித்து உயர் பதவிகளை வகித்தாலும் குடும்பத்திலும் சமூக கட்டமைப்பிலும் ஏதோ ஒரு விதத்தில் தங்களின் தனித்தன்மைகளை வெளிக்காட்ட முடியாத சூழல்கள் இருக்கத்தான் செய்கின்றன. அரச குடும்பங்களிலும், மேட்டிமை குடும்பங்களிலும் பிறந்த பெண்கள் சில விடுதலைகளை அடைந்திருந்த போதிலும், அவர்களும் ஒடுக்கப்பட்டுக் கொண்டு தான் இருந்தார்கள் என்பதை வலுவாக நிரூபிக்கும் வகையில் உள்ளது ராஜம் கிருஷ்ணன் அவர்களின் இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை. அனைத்து சமயங்களும் பெண்களை ஒடுக்கிய செய்திகளை எழுத்தாளர் நமக்கு தெளிவாக சுட்டிக்காட்டுகிறார். காலந்தோறும் பெண், காலந்தோறும் பெண்மை, இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை என்று பெண்களுக்காக எழுதப்பட்ட இம்மூன்று கட்டுரை நூல்களிலும், புராண காலம் தொட்டு இன்று வரையிலும் பெண்கள் எப்படியெல்லாம் அடக்குமுறைகளுக்கு ஆளாகி வருகின்றனர் என்பதை பதிய வைத்திருக்கிறார். இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை எனும் புத்தகத்தை முன்னிருத்தி இக்கட்டுரை அமைந்துள்ளது.இந்திய வரலாற்றில் போற்றக்கூடிய நிலையில் உள்ள சான்றோர்களான விவேகானந்தர், காந்தி, ஜவஹர்லால் நேரு ஆகியோரின் பெண் சார்ந்த புரிதல்கள் எப்படிப்பட்ட குழப்பங்களை சமுதாயத்தில் உருவாக்கி இருந்தன என்பதனைப் பற்றி நுணுக்கமாக விமர்சனம் செய்து குற்றம் சாட்டியுள்ளார். எனினும் 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த சாவித்திரி பாய், அம்பேத்கர், பெரியார்,தருமாம்பாள் ,மீனாம்பாள் போன்றோரின் பெண் விடுதலைகள் சார்ந்த பதிவுகள் குறித்து இப்புத்தகத்தில் இடம் பெறாதது ஒரு பெருங்குறை எனலாம்.காலந்தோறும் பெண் என்ற நூலில் நாகம்மை, மணியம்மை பற்றிய தகவல்களை அளிக்கும் ராஜம் கிருஷ்ணன் 90 களின் தொடக்கத்தில் பெரும்பான்மை அறியப்பட்ட தலித்திய பார்வையிலும் பெண்கள் நிலை சார்ந்து விளக்கி இருக்கலாம்.

'இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை' எனும் புத்தகத்தின் வாயிலாக, பெண்கள் சார்ந்தும், பெண் முன்னேற்றத்துக்காக பாடுபட்ட தலைவர்கள் சார்ந்தும், ஒவ்வொரு காலகட்டத்திலும் பெண்களின் நிலை எவ்வாறெல்லாம் இருந்தன என்பதைப் பற்றி ராஜம் கிருஷ்ணன் அவர்களின் பார்வையிலும், தற்கால மாற்றங்களின் அடிப்படையிலும் விவாதிப்பதாக இவ்வாய்வு கட்டுரை எழுதப்பட்டுள்ளது. புராணங்களை பற்றி தெளிவாக பல தகவல்களை அளிக்கும் ராஜம் கிருஷ்ணனின் பின்னணியை

விளக்கும் விதமாகவும் இக்கட்டுரை அமைந்துள்ளது. ராஜம் கிருஷ்ணன் பெண்கள் சுயமாகசிந்தித்து செயல்பட அளிக்கும் கருத்துகளையும் இக்கட்டுரை வழங்குகிறது.

## புராணங்களும் ,பெண்களும் - வேத காலம் உயர்வா?

ஓகவதி, சிரகாரி, தனு, தமிழ்நாட்டு ரேணுகா, ஆந்திர மாதங்கி, கர்நாடக எல்லம்மா, திரௌபதை, காந்தாரி,சூர்ப்பனகை, சீதை, கைகேயி, அகலிகை, மேனகை, கண்ணன் மனைவிகள், எட்டயபுரத்து வள்ளிக் கண்ணம்மா, மரியா மக்தலேனா , புத்தர் காலத்து அபாக்கிய வதிகள், பிக்குனிகள், ஆம்ரபாலி, மீராபாய், அதிதி, குண்டலகேசி, அம்பாலி ,அர்த்த கேசி, பத்மாவதி, விமலா, சங்க இலக்கியப் பெண் புலவர்கள், வேதகால பிரம்மவாதினிகள், லோபமுத்திரை, அசுவினி, அவ்வையார், கண்ணகி, ஆண்டாள், காரைக்கால் அம்மை, கன்னட பகுதி அக்கமாதேவி, கஸ்தூரிபாய், இந்திரா காந்தி, கமலா நேரு, இந்திரா காந்தியின் மருமகள் மனேகா போன்றோரின் வரலாறுகளைக் கூறுமிடத்து பெண்கள் கட்டுப்பாட்டுக்குள்ளேயே வாழ்ந்த காலங்களை நமக்கு வெளிச்சமிட்டுக் காட்டுகிறார். இந்தப் பட்டியலில் பெரும்பான்மையான பெண்கள் இராமாயண, மகாபாரத புராண காலத்து பெண்களாகவே இருக்கின்றனர்.

இதன் வழி ராஜம் கிருஷ்ணன் அவர்கள் புராண கதை காலங்களில் இருந்தே பெண்கள் அடிமைப்பட்டிருந்த நிலையை ஆழ்ந்து தோய்ந்து விமர்சனங்களை முன் வைத்துள்ளார் என்பதையும் நம்மால் அறிய இயலும். பல இடங்களில் ரிக் வேதம் பெண்களை சரியான வழியில் நடத்தியது என்றும், சில இடங்களில் பிற்காலத்தவரான ஆண்களால் மாறுதல்கள் அடைந்து வேதங்கள் பெண்களை ஒடுக்கின எனவும் குறிப்பிடும் இடங்களில் வேத காலம் புனிதகாலம் என நிறுவ முயல்கிறாரோ என்ற எண்ணமும் தோன்றுகிறது.

"உடலை விற்பவள் பாவி என்று சொல்லிக் கொண்டே உயர்வருக்கம் அந்த உடலை உறிஞ்சி உயிர் குடித்தது கேட்கப்படவேயில்லை" (ப.60) என்று சமூகத்தில் உயர் வர்க்க மக்களால் தான் பெண்கள் தேவதாசி போன்ற முறைகளுக்கும் தள்ளப்பட்டார்கள் என்பதையும், ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பின்பு தான் அதிலிருந்து விடுபடுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன என்பதையும் வரலாற்று ரீதியாக நமக்கு எடுத்துக்காட்டுகிறார் ராஜம் கிருஷ்ணன்.

## புனிதவதி, ஆண்டாள் மறைக்கப்பட்ட மறுக்கப்படும் வரலாறுகள்

காரைக்கால் அம்மை மற்றும் ஆண்டாள் ஆகியோரைப் பற்றி குறிப்பிடும் இடங்களில் சரியானதொரு கருத்தினை இந்தச் சமூகத்திற்கு விட்டுச் செல்கிறார்.

"சமயம்- பக்தி என்று வரும்போது, அற்புதங்களும், மாற்றங்களும் வரலாற்று உண்மைகளை மறைத்து விடுகின்றன என்பதை கன்னட மொழி ஆய்வாளர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்" (ப .104) என்றும்,

"ஆண்டாளின் வரலாற்றை சுற்றியுள்ள தெய்வீக அற்புதப் போர்வையை சற்றே நீக்கி வரலாற்றுக்கண் கொண்டு பார்க்கலாம்" (ப.104) என்றும் பக்தி இலக்கிய காலகட்டத்தில் உண்மையில் பெண்களுக்கு நிகழ்ந்தது என்ன? அவர்களுக்கு ஏற்பட்ட அழுத்தங்கள், சிக்கல்கள் என்ன என்பதை பற்றியெல்லாம் விளக்க முயல்கிறார்.

அவர் குறிப்பிடுவதைப் போல கன்னட மொழி இலக்கியங்களில் அக்கமாதேவி சார்ந்த வரலாற்றுச் செய்திகள் வெளிவந்ததைப் போல், தமிழில் இன்று வரை பெரும்பான்மையாக பெண் பக்திமார்கள் குறித்த வரலாற்றுச் செய்திகள் அவ்வளவாக கண்டுபிடிக்கப்படவில்லை என்றே கூற வேண்டி இருக்கிறது.

## சமயங்கள் ஒடுக்கிய பெண்கள்

"பாரதி, புதிய ஆத்திச்சூடியில்; பழைய தையல் சொற் கேளேல் '(பெண்வழிச் சேரல்)' என்ற வரியை நீக்கி மாற்றி "தையலை உயர்வு செய் என்று கூறினார்" (ப.85) என்று கூறுமிடத்தும், "எட்டயபுரத்து வள்ளிக் கண்ணம்மா, 1930 களில் முத்துலட்சுமி அம்மையும், மூவலூர் அம்மையும் செயல்படுமுன்பே, பாரதியார் அறிவுரையின்படி பொட்டறுத்து திருமணம் செய்து கொண்டாராம்" (ப.61) என்று கூறுமிடத்தும் பாரதி மட்டும்தான் பெண் விடுதலைக்காக முன்பே குரல் கொடுத்தவர் என்ற தொனி இடம் பெறுகிறது. ஆனால் பாரதிக்கு முன்பும் பாரதிக்கு பின்பும் பெண் விடுதலைக்காக குரல் கொடுத்த பலரின் பதிவுகள் இப்புத்தகத்தில் இடம்பெறாதது அதிருப்தியை ஏற்படுத்துகின்றது.

"அக்காலத்தில் ஷத்திரியரும் பிராமணரும் மாமிசம் புசிக்காதவர்களல்ல மதுவருந்தாதவர்களல்ல" (ப.45) என்பதையும், அகத்திய முனிவர் வாதாபியை கொன்று நரமாமிசம் உண்டதையும், ஒப்புக்கொள்ளும் ராஜம் கிருஷ்ணன், இராமாயண காலத்தில் நரமாமிசம் உண்ணும் வழக்கமில்லை என்றும், இராமன் மாமிசம் உண்ணவில்லை என்பதற்கும் முட்டுக் கொடுக்க முயல்கிறார். எனினும் சமண சமயம்

தலைதூக்கிய காலத்தில் தான் துறவும் புலால் உண்ணாமையும் இந்திய சமுதாயத்தில் இசைந்தன என்று அவர் கூறுவது ஆராய்தலுக்கு உரியது. அதேபோல தலையை முண்டிதம் செய்யும் வழக்கமும் சமண, புத்த சமயங்கள் துறவுரிமை அளித்ததனால் வந்து விடிந்தவை என்று அவர் கூறுவது எதனடிப்படையில் ஆன கருத்துகள் என்று அறிய முடியவில்லை. அதற்கான சான்றுகளையும் அவர் அளிக்கவில்லை.

சங்கம் என்ற சொல் குறித்தும், கண்ணகியின் வரலாறு குறித்தும், சங்க இலக்கியப் பாடல்கள் குறித்தும் விளக்குமிடங்களில், குறிப்பாக பாசறையில் விறலியர், பாடினி போன்றோர் ஆண்களை களிப்பூட்டுவதற்காக இருந்தார்களே தவிர, பெண்கள் வீரத்துடன் போரில் ஈடுபடவில்லை எனக்கூறுமிடத்தும் ஏற்புடையதாகவே உள்ளது.

## பெண் பிரதமர்க்கும் விடுதலையில்லை

பெண் கல்வியறிவு, பணி, பதவிகள் பெற்றாலும் போகப்பொருளாகவும், ஆணின் தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருளாகவும் தான் பெண்ணின் வாழ்க்கை உழன்று கொண்டு இருந்துள்ளது என்பதை இந்திராகாந்தி வழி நமக்கு உணர்த்துகிறார் ராஜம்கிருஷ்ணன். பிரதமராக இருந்த காரணத்திற்காக இந்திராகாந்தி சார்ந்த உண்மைகளை கூற அதிக பக்கங்களை எடுத்துக் கொண்டாரா எனத் தெரியவில்லை.

இந்திராகாந்தியும் தான் பெண் என்ற காரணத்திற்காக பல வித சவால்களை சந்தித்து இருந்தாலும், தனது மருமகளான மனேகாவை, கணவன் இறந்த பிறகு தன்னை அலங்கரித்துக் கொள்ளும் இவளை ஆதரிக்கலாமா என்ற கேள்விகளை எழுப்பும் போது, அது அரசியலுக்காகவே இருந்தாலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லைஎன்பதை திட்டவட்டமிட்டுக்காட்டுகிறார். இந்த நிலை தான் இன்று பெரும்பாலும் சமூகத்தால் ஏற்பட்டு வருகின்றது. பெண்கள் பெண்களை ஒடுக்கும் நிலை, அதாவது மாமியார் -மருமகள் , உயர் அதிகாரி அடிப்படை ஊழியர் என குடும்பங்களிலும் சமூகத்திலும் பெண்களே பெண்களை ஒடுக்கும் நிகழ்வுகள் நடந்து கொண்டு தான் உள்ளன.

## ராஜம் கிருஷ்ணனின் பெண் விடுதலை

இன்றைய சட்டங்கள் பெண்களுக்கு பல வித உரிமைகளை வழங்கி வரும் நிலையில், பெண்கள் அவற்றை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் என்ற ஆதங்கத்தையும் இராஜம்கிருஷ்ணன் வெளிப்படுத்துகிறார்.

"பெண்களின் விடுதலைக்கும் சுயேச்சைக்குமே கர்ப்பம் விரோதியாயிருப்பதால் சாதாரணமாய்ப் பெண்கள் பிள்ளைகளைப் பெறுவது என்பதை அடியோடு நிறுத்தி விட வேண்டும் என்கிறோம். அதுமாத்திரமில்லாமல் பல பிள்ளைகளைப் பெறுகின்ற காரணத்தால் ஆண்களும் கூட சுயேச்சையுடனும் வீரத்துடனும் விடுதலையுடனும் இருக்க முடியாதவர்களாகவே இருக்கிறார்கள்" (ப.43,பெ.ஏ.அ) என்று பெரியார் கூறியதைப் போலவே , இராஜம் கிருஷ்ணனும் குடும்பம், கல்யாணம், கருப்பை ஆதிக்கம் ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறுவதே உகந்தது என்கிறார். பெண் இலக்கிய ஆளுமைகள் எனும் புத்தகத்தில் பிரேமா குறிப்பிடுவதைப் போல, ராஜம் கிருஷ்ணனின் பார்வை பெண் விடுதலை சார்ந்த ஒரு புதிய பார்வை எனலாம்.

## முடிவுரை

ராஜம் கிருஷ்ணன் நாவல் மட்டுமன்றி, கட்டுரைகளையும் நேரில் சென்று தகவல்கள் திரட்டி எழுதக் கூடிய தன்மை பெற்றவராக இருந்திருக்கிறார் என்பதும், அத்தகைய சூழலை அவருடைய சுற்றம் அமைத்துக் கொடுத்திருக்கிறது என்பதையும் நம்மால் மறந்து விட இயலாது. இன்னும் பல பெண் தலைவர்கள், போராளிகள் பற்றிய தகவல்களை சேகரித்து பெண்கள் சார்ந்த அனைத்து நிலை வளர்ச்சிகளையும் இந்தச் சமுதாயம் காண வேண்டும். பிரதமராக இருந்து இந்திராகாந்தி அடைந்த இன்னல்களை, இன்றும் பல பெண் அரசியல்வாதிகள், தலைவர்கள் எதிர்கொண்டு தான் வருகிறார்கள். இன்றளவும் குடியரசு தலைவர் திரௌபதி முர்முவால் அனைத்து நிகழ்வுகளுக்கும் மற்றவர்களைப் போல் செல்ல இயலவில்லை. பெண் என்ற காரணத்தாலும், குறிப்பிட்ட இனத்தினர் என்ற அடிப்படையிலும் பெண்கள் இன்றும் ஒடுக்கப்பட்டுக்கொண்டே தான் உள்ளனர். துணை தேர்வு, குழந்தை தேர்வு, கல்வி என எந்த நிலையிலும் பெண்கள் சுயமாக முடிவெடுக்க முடியாத நிலையில் இருக்கின்ற நிலை தான் உள்ளது. ஆணும் பெண்ணும் அனைத்து விடயங்களிலும் சமமாக இந்தச் சமுதாயத்தில் முன்னேற்றம் காணும் போது தான் உண்மையான விடுதலை இங்கு அனைவருக்கும் அமையும்.

## References

ராஜம் கிருஷ்ணன், (2003) பெண் விடுதலை : இலக்கியத்திலும் வாழ்விலும், தாகம், சென்னை, இந்தியா.

ராஜம் கிருஷ்ணன், (2006) இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை, தாகம், சென்னை, இந்தியா.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License